**சுவாமி கமலாத்மானந்தர்**
**தலைவர்**
**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்**
**ரிசர்வ் லைன், மதுரை - 625 0 14.**
**போன் : 0452-2680 224, 2681 181**

# எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்

ஒரு சமயம் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு நைவேத்தியம் செய்வதற்காக உணவு வைக்கப்பட்டிருந்தது.

அதை ஆசையோடு பதிமூன்று அல்லது பதினாறு வயதுச் சிறுவன் ஒருவன் பார்த்துக்கொண்டே இருந்தான். கண் எச்சில் பட்ட அந்த உணவை ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் படைக்க அன்னை ஸ்ரீ சாரதாதேவியார் மறுத்துவிட்டார்.

ஆனால் இன்று நான் பார்ப்பது என்ன? அதே சிறுவனுக்கு -நைவேத்தியம் செய்வதற்காக வைத்திருந்த உணவை நைவேத்தியம் ஆவதற்கு முன்பே - அன்னையார் தமது கைகளால் ஊட்டிக்கொண்டிருந்தார்!

இதைப் பார்த்த நான் அன்னையின் அருகில் சென்று, ''அம்மா! பகவானுக்குப் படைக்க வேண்டிய உணவை எடுத்து இவனுக்கு ஊட்டுகிறீர்களே!'' என்று கேட்டேன்.

அதற்கு அன்னையார், ''ஆம், மகனே இவன் இதைச் சாப்பிடட்டும். நமது கடவுள் ( ஸ்ரீ ராமகிருஷ்ணர்) இவனிடம் இருக்கிறார் அல்லவா?'' என்று பதில் கூறினார்.

ஒரு நாள் இரவு, அன்னையின் பணிப் பெண்களில் ஒருத்தி தலையணை இல்லாமல் படுத்திருந்தாள். இந்த விஷயம் அன்னைக்குத் தெரிய வந்தது. உடனே அவர் தாம் தமது தலைக்கு வைத்திருந்த தலையணையை அவளிடம் கொடுத்து, படுத்துறங்கும்படிக் கூறினார்.

தற்செயலாக அப்போது நான் ஏதோ வேலையாக அந்தப் பக்கம் சென்றேன்.

நான் அந்தப் பணிப்பெண்ணின் அருகில் சென்று, ''அன்னையின் தலையணையை நீ உபயோகிக்காதே'' என்று கூறினேன்.

அன்னை என்னைத் தடுத்து, ''இல்லை, அவள் என் தலையணையை தன் தலைக்கு வைத்துக்கொள்ளட்டும். ஸ்ரீ குருதேவர் உங்கள் எல்லோரிடமும் குடிகொண்டிருக்கிறார்'' என்றார்.

ஒரு நாள், நானே அன்னையின் கருணைக்குப் பாத்திரமானேன்.

அன்றைய தினம் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் படைக்க வேண்டிய பாலை அன்னை என்னிடம் கொடுத்து, 'மகனே! இந்தக் குவளையில் இருக்கும் பாலை நீ சாப்பிடு" என்றார்.

*நான் பயந்து போனேன்: ''அம்மா! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? குரு தேவருக்கு (ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு) நிவேதனம் செய்வதற்காக வைக்கப்பட்டிருக்கும் பாலை நான் சாப்பிடுவதா? அந்தக் குவளையில் அல்லவா, நாம் தினந்தோறும் குருதேவருக்கு நிவேதனப் பால் வைக்கிறோம்? இதை என்னால் சாப்பிட டியாது'' என்று நடுங்கிக்கொண்டே கூறினேன்.*

*அதற்கு அன்னை, ''பரவாயில்லை. நீ அந்தப் பாலைச் சாப்பிடு. நம் பிரபு (ஸ்ரீ ராமகிருஷ்ணர்) எல்லோரிடமும் குடி கொண்டிருப்பதை நான் பார்க்கிறேன்" என்றார்.*

*அன்னையார் ஒரு கிளியை அன்போடு வளர்த்து வந்தார். அதை 'கங்காதரன்' என்று அவர் அழைப்பது வழக்கம்.*

*கங்காதரனுக்கு, ''மா, மா (அம்மா, அம்மா)'' என்று மட்டும்தான் கூப்பிடத் தெரியும். வேறு எந்தச் சொல்லையும் அது கற்க மறுத்துவிட்டது.*

*அன்னை ஒரு நாள் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் படைப்பதற்காகத் தட்டில் வைத்திருந்த 'ஹல்வா' விலிருந்து சிறிது எடுத்து கங்காதரனுக்கு ஊட்டினார்.*

*அதைப் பார்த்ததும் நான் ஓடோடிச் சென்று, ''அம்மா இன்னும் பூஜை ஆரம்பிக்கவில்லை! அதற்குள் 'ஹல்வா'வை இந்தக் கிளிக்கு ஊட்டி விடுகிறீர்களே!'' என்ற பரபரப்புடன் வினவினேன்.*

*அதற்கு அன்னை எப்போதும் போல் மிகவும் அமைதியாக, ''குழந்தாய்! ஸ்ரீ ராமகிருஷ்ணர் இந்தப் பூஜையறையில் மட்டும் இருப்பதாகவா நீ நினைக்கிறாய்? எல்லா உயிர்களிலும் அல்லவா அவர் இருக்கிறார்'' என்றார்.*

--------------